**பண்டாரவளை மாநகர சபை - 2023**

-------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பண்டாரவளை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பண்டாரவளை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் 154(6) கணகக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட 1.6.1(ஆ) (எ) என்ற பரிந்துரைகள் தவிர ஏனைய பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மாநகர சபையின் பொது நூலகத்திற்கு ஏற்பட்ட திடீர் நீர்க் கசிவின் காரணமாக ஏற்பட்ட இழப்பை மீளளிப்புச் செய்வதற்காக கிடைக்க வேண்டிய காப்புறுதி இழப்பீடு ரூபா 6,924,833 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பொது நூலகத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த ரூபா 1,746,000 ஆன நூலகப் புத்தகங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | கடந்த ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் 916,164 மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | கடந்த ஆண்டிற்குரிய ரூபா 836,350 ஆன இருப்புக்கள் மற்றும் சில்லறை சந்தை இருப்புக்கள் மற்றும் சில்லறை சந்தை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வரி வாடகைக்கு வழங்கும் கேள்வி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | முன்னைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது செலுத்த வேண்டிய உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கில் தவறவிடப்பட்டிருந்த கடன் தொகை ரூபா 4,403,970 திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சமனாக காணப்பட வேண்டி இருந்தமையால் இது நிதியத்தில் சீராக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு உள்ளீர்க்கப்பட்டிருந்த 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 703,896 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த மீதி மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாநகர சபையால் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள 09 சிவில் வழக்குகள் மற்றும் வெளித்தரப்பினரால் மாநகர சபைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த 09 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பிற்க முக்கியத்துவமான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட ல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 4,110,576,197 ஆக இருந்த போதிலும் அத் திகதியில் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 4,116,606,427 ஆனமையால் இந்த இரண்டு மீதிகளுக்குமிடையே ரூபா 6,030,230 வேறுபாடு காணப்பட்டது. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி மற்றும் அத்திகதியில் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கின் மீதி என்பவற்றை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 1,642,517 ஆன 03 சொத்து வகைகளுக்குரிய நிலையான சொத்து பதிவேடு மற்றும் பொருட் பதிவேட்டு புத்தகங்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | உரிய தகவல்கள் பொருட்பதிவேட்டிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததா என்பதை பரீட்சிப்பதற்கு உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் பௌதீக ரீதியில் காணப்படாத ஆதனங்கள் மற்றும் பொறிகள் இருக்குமாயின் உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆலோசனை மற்றும் கட்டளைப் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொருட் பதிவேட்டுப் புத்தகம், நிலையான சொத்துப் பதிவேடு என்பன நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 19 ஆம் இலக்க மாநகர சபைகள் மற்றும் கட்டளைச் சட்டம் (252 ஆவது அதிகாரம்) | | | |
| 272(6) ஆம்பிரிவு 267 (30) ஆம் பிரிவு | மாநகர சபை எல்லையில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள 93 விளம்பர அறிவித்தல் பதாதைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 4,292,587 அறவிடப்பட்டிருக்க வில்லை. | ரூபா 734,485 தொகையொன்று தற்போது அறவிடப்பட்டுள்ளது. | கால ரீதியில் விளம்பர அறிவித்தல் வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப் பிரமாணம் 104(4) ஆம் பிரிவு | 2015 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட விபத்தொன்று தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2019.07.12 ஆந் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கடிதம் அனுப்பப் பட்டிருந்த போதிலும் இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | 28 வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் வாகனத்தின் வெளிப்பகுதியில் பொறிக்கப்பட்டிருக்க வில்லை. | பண்டாரவளை மாநகர சபைக்குச் சொந்தமான வாகனத்திற்காக அரச இலட்சினை தற்போது இடப்பட்டுள்ளது. | அரச இலட்சினை மற்றும் பெயர்கள் பொறிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 54,749,311 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,807,000 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 20,030,000 | 18,201,585 | 10,435,017 | 7,766,568 | 15,335,000 | 39,332,837 | 13,797,077 | 25,535,760 |
| **(ii)** | வாடகை | 47,744,803 | 55,201,498 | 49,085,432 | 6,116,066 | 44,919,768 | 95,221,185 | 49,053,982 | 46,167,202 |
| **(iii)** | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 6,704,000 | 13,327,004 | 13,327,004 | - | 10,105,000 | 7,603,250 | 7,603,250 | |
| **(iv)** | ஏனைய வருமானம் | 33,890,000 | 45,432,268 | 45,432,268 | - | 52,000,000 | 56,805,259 | 46,546,563 | 10,257,696 |
| | மொத்தம் | **108,368,803** | **132,162,355** | **118,279,721** | **13,882,634** | **122,359,768** | **198,962,531** | **117,000,872** | **81,960,658** |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 7,252,568 அறவிடப் பட்டிருக்கவில்லை. | ரூபா 1,805,216 தொகை அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை ஆதனவரி அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 5,773,458 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 3,599,354 அறவிடப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிலுவை ஆதனவரி அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய நிலுவை விருந்தினர் விடுதி முகாமைத்துவக் கட்டணம் ரூபா 17,353,588 அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,226,378 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 16,975,243 என்பன பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணங்களை குறிப்பிடப்பட்ட உரிய பணத்தை பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கும் மற்றம் மாகாண இறைவரி ஆணையாளருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை மீதி அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான கழிவுப் பொருள் மீள்சுழற்சி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படாமல் உக்காத கழிவுப்பொருள் 45 தொன் அளவில் பண்டாரவளை மடுகஸ்தென்ன என்ற இடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | உக்காத கழிவுப்பொருட்கள் பதுளை மாநகர சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பிரகாரம் கழிவுப்பொருள் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபையினால் நுகசெவன சந்தைக் கட்டிடத் தொகுதியில் 105 கடைகள் வாடகைக்கு வழங்கும் போது கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை | நுகசெவன சந்தைக் கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பதற்கு முன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கடை உரிமையாளர்களுக்கு சபை அங்கீகாரத்தின் பிகாரம் கடைகள் நீண்டகால அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது கோள்வி கோரி ஆகக் கூடிய நலன்களைப் பெறும் வகையில் செயற்படுதல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பண்டாரவளை மாநகர சபையினால் பயன்படுத்தப்படுகின்ற கலி பௌசர், தீயணைப்பு வண்டி மற்றும் கெப் வண்டி என்பவற்றின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தைக் கையேற்பதற்காக கடிதம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கையளிக் கப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் உரித்து சட்ட ரீதியான கையேற்கப் படல் வேண்டும். |

## 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 29 ஆந் திகதிய 13/2008 (vi) என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் பண்டாரவளை மாநகர சபையின் நிறைவேற்று உத்தியோகத்தரால் ஒரு வாகனத்திற்கு மாதாந்தம் எரிபொருள் லீற்றர் 140 படியொன்று மற்றும் மாநகர சபை நிதியத்திலிருந்து ரூபா 172,320 எரிபொருள் லீற்றர் 455 உம் 2022 ஏப்ரல் முதல் 2023 மார்ச் மாதம் வரைக்கு உரியதாக வழங்கப்பட்டிருந்தது. | எரிபொருள் அளவில் மற்றும் வழங்கப்பட்ட விடயங்களைப் பரீட்சித்து எரிபொருள் அளவு மேலதிகமாக வழங்கப்பட்டிருக்குமாயின் அந்த அளவின் ஒரு பகுதியை மாதாந்த எரிபொருள் படியாக வழங்கும் போது ஈடுசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக செலுத்துதல் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மாநகர சபையின் கார் வண்டி சபையின் எரிபொருள் ஒதுக்கத்திற்கு 92 ஒக்டன் வகையின் எரிபொருள் பயன்படுத்தி இருந்ததுடன் உத்தியோகத்தருக்கு செலுத்தும் 95 ஒக்டன் வகையின் எரிபொருள் விளையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்தமையின் காரணமாக சபையின் நிதியத்திலிருந்து ரூபா 175,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | எரிபொருள் ஒதுக்கத்தில் ஏற்பட்ட இவ்வாறான எரிபொருள் ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்ட அதன் மூலம் நிறுவனத்தின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக கொடுப்பனவுகள் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | சீவலி வீதி கடைத் தொகுதியில் 228 கடைகள் நீண்ட கால வாடகைக்கு மாநகர சபையின் நகர பொறியியலாளர்களையும், மேலும் 04 அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய குழு ஒன்றின் மூலம் ஆகக்குறைந்த கேள்விப் பெறுமதி தீர்மானிக்கப்பட்டு கடை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | சீவலி கடைத் தொகுதியின் 228 கடைகளுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் தற்போது மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. | கால ரீதியில் ஆதனங்களை மதிப்பீடு செய்து வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது மாநகர சபையினால் சீவலி வீதி கடைத் தொகுதியின் 228 கடைகள் நீண்டகால வாடகைக்கு வழங்குவதற்கு 2022 மே 31 ஆந் திகதிய மூன்று பகிரங்க அறிவித்தல்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அறிவித்தல்களில் கடைகளின் பெறுமதி மதிப்பீட்டுத் தொகையினை விட குறைந்த தொகையொன்று ஆகக் குறைந்த கேள்வியாக உள்ளடக்கப்பட்டதன் காரணமாக முதலாவது பத்திரை அறிவித்தலை திருத்துதலை உள்ளடக்கிய இரண்டு சந்தர்ப்பங்களின் போது பத்திரிகை அறிவித்தல்களை பிரசுரிப்பதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 84,424 செலவிடப்பட்டிருந்தது. | கடமைகளை நிறைவேற்றும் போது ஏற்பட்ட தாமத வழுக்களினால் பத்திரிகை அறிவித்தலை மீண்டும் சரிசெய்து பிரசுரிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சபைக்குரிய இருப்புக்கள் மற்றும் சில்லறை நுகர்வோர் சந்தைகள் 2020 ஆம் ஆண்டிற்கு கட்டணம் அறவிடும் உரித்தை வாடகைக்கு வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டில் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. கேள்வி கோரல் 06 நாட்களுக்கு வரையறுக்கப்பட்டமையால் அறிவித்தல் பிரசுரித்து 03 நாட்களுக்குப் பின்னர் கேள்வி விண்ணப்பம் விநியோகித்தல் போன்றவற்றின் மூலம் கேள்விதாரர்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக குறித்துரைக்கப்பட்ட விஷேட நிபந்தனைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு போதியளவான காலம் காணப்படாமை போன்ற மிகவும் சிறிய குறைபாடுகளின் அடிப்படையில் ஆகக்கூடிய கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரர்களின் கேள்வியை நிராகரித்தல் மற்றும் குறைந்த கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரர்களின் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக ரூபா 8,290,000 நிதி ரீதியான நட்டமொன்று மாநகர சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது. | மொத்த மற்றும் சில்லறை சந்தைகள் நீண்டகாலமாக ஒரே ஒரு நபருக்கு வாடகைக்கு வழங்குவதை தடுப்பதற்காக நிபந்தனைகளை அதிகரித்து பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 229(2)ஆம் பிரிவின் பிரகாரம் ஆளுநரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | சபைக்கு ஆகக் கூடிய நலன்களைப் பெறும் வகையில் கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். |